# தவணைப் பரீட்சை, யூன்- 2015
# Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | தமிழ் - I | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ பகுதி I இல் உள்ள இரு வினாவுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி - I

01) மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i) கருங்கால் வேம்பின் ஒண்பூயாணர்
என்னை இன்றியும் கழிவது கொல்லோ
ஆற்றயலெழுந்த வெண் கோட்டதவத்
தெழு குளிறு மிதித்த ஒரு பழம் போல
குழைய கொடியோர் நாவே
காதலர் அகலக் கல்லென்றவ்வே.

(அ) இச்செய்யுளின் பொருளை இக்கால மொழிநடையில் எழுதுக.
(ஆ) தலைவியின் பிரிவாற்றாமை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
(இ) பாடலில் இடம்பெற்றுள்ள முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன வற்றை எடுத்துக்காட்டுக. (12 புள்ளிகள்)

(ii) அகமிசை யிருந்து புசித்திட கிடையாத
ஆகுலம் மிகுத்து உளம் கலங்கி
செக தலம் முழுவதும் திரிந்து அலைந்தவர்கள்
திரவியக் குவை எதிர
இகல் அற எடுத்து மனைமிசை புதைத்தோர்
இதய பங்கய களிப்பு என
மகிதலம் முழுதும் துதி செய கரிய
மழை முகில் கரு உதித்ததுவே

(அ) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
(ஆ) மக்கள் அடைந்த துன்பங்களை எடுத்துக் காட்டுக.
(இ) இச்செய்யுளில் கையாளப்பட்ட அணிகளை எடுத்துக் காட்டுக.
(ஈ) ஒரு காப்பியத்திற்கு உரிய எடுத்துரைப்பு இச் செய்யுளில் எவ்வாறு அமைந்துள்ளது என தெரிவுபடுத்துக. (12 புள்ளிகள்)

02) ‘அ’ பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

‘ஆ’ பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) ஆண்டவன் நீ தான்

ஆளப்பிறந்த விவசாயி - இங்கு
அடங்கிக் கிடந்தான் ஒரு நாளில்
கூழைப்பிசைந்தான் குடிசையிலே - அவன்
குறுகிக் கிடந்தான் கொள்கையிலே.

நிலத்தை உழுவான் நிலத்தினிலே - தன்
நினைவு இழந்து சாகுமட்டும்
கலப்பை இழுக்கும் மாட்டுடனே - அவன்
காலங் கழித்தான் கண்கலங்கி.

உண்பதும் உடுப்பதும் வயல்தனிலே - அவன்
உறங்கிக் கிடப்பதும் வயல்தனிலே
விண்தான் தனது கூரையென - ஐயோ
வியர்வை தன்னில் குளித்திடுவான்.

உழுபவருக்கே நிலமெல்லாம் - இங்கு
உருத்தா யாக்கிடச் சட்டங்கள்
நலிவு இன்றி செய்திடுவோம் - இந்
நல்லவர் தம்மை உயர்த்திடுவோம்.

பண்ணை முறையில் பலநூறு - வயல்
பரப்பை உழுது உழைக்கட்டும்.
திண்ணை தூங்கித் திரிபவர்கள் - அதைத்
தின்ன நினைத்தால் செருப்படிதான்.

காட்டை வெட்டி களமாக்கி - அதைக்
கதிர்கள் கொட்டும் தலமாக்கும்
நாட்டின் இறைவன் விவசாயி - ஏன்
நன்றி மறந்தாய் முதலாளி.

அன்னை நாட்டை காப்பவனே - அதைப்
பசியில் நின்று மீட்பவனே
அனைத்தும் நீதான் அமுதூட்டும் - எம்
ஆண்டவன் நீதான் நீ வாழ்க.

(i) இக்கவிதையில் விவசாயியின் வாழ்க்கை நிலை சித்தரிக்கப்படுமாற்றினை எடுத்துக் காட்டுக.

(ii) நாட்டின் இறைவன் விவசாயி என்று கவிஞர் கூறுவதன் பொருத்தப்பாட்டினை வெளிப்படுத்துக.

(iii) திண்ணை தூங்கித் திரிபவர்கள் - அதை
தின்ன நினைத்தால் செருப்படிதான். என்ற பாடல் வரிகளில் வெளிப்படும் கவிஞரின் உணர்வு நிலையினைக் குறிப்பிடுக.

(iv) கவிஞர் காட்டும் முதலாளி வர்க்கத்தின் இயல்புகளைக் குறிப்பிடுக. *(16 புள்ளிகள்)*

(ஆ) அவளது பிஞ்சு உள்ளம் அவளை ஒரு தீண்டத்தகாதவள் போல அவர்கள் கருத்திற் கொண்ட பொழுது அவளுக்கென்று ஒரு புதிய விதியை அந்தப் பணக்காரக் குடும்பம் சிருஷ்டிக்க முயல்வதை அவள் கண்டாள்.

வள்ளிக்கென்று ஒரு பழைய தட்டத்தைக் கொடுத்து தரையில் உட்கார்ந்து சாப்பிட வேண்டுமென்றும் ஒரு பாயைக் கொடுத்து சமையலறையின் ஒரு மூலையிலே விரித்துப் படுக்குமாறும் கூறியபொழுது - அவர்களது அந்த விதிக்குப் பணிந்தவளாக தன்னைக் காட்டிக் கொண்ட போதும் ஒரு கேள்வி அவளுக்குள்ளே பிறந்தது. ஒரு குரல் ஆவேசமாகக் கிளர்ந்தது. அவள் பிறந்து வளர்ந்து வந்த இந்த உலகத்தில் அவளுக்கு முதல் முதலாகத் தெரிய வந்த ஏற்றத்தாழ்வு சாதியமைப்புத்தான். அதன்படி பார்த்தால் அவள் ஒரு வேளாளப் பெண். தாழ்த்தப்பட்டவர்களை வீட்டிற்கு வெளியே நிறுத்தி அவர்களது கைமண்டையிலே செம்பு ஒட்டிக் கொள்ளாமல் மழ மழவென்று தண்ணீர் ஊற்றிய ஒரு உயர் சாதிப் பெண்ணாக கிளிநொச்சியிலே உலாவி வந்த ஒருத்திக்கு - அதே விதிமுறைகளை இதோ இவர்கள் சிருஷ்டிக்கிறார்கள். அவளுக்கென்று ஒரு தட்டம், அவளுக்கென்று ஒரு கிளாஸ், அவளுக்கென்று ஒதுக்கப்பட்ட ஒரு இடம், அவள் தரையில் தான் உட்காரலாம். நாற்காலியில் உட்காரமுடியாது. வீட்டைப் போல சகஜமாக - தாராளமாக சுதந்திரமாக எந்தவொரு பொருளையும் தீண்டமுடியாது. எஜமானையும் எஜமானியையும் தேடி வரும் நண்பர்களுக்கும் சினேகிதைகளுக்கும் இன்ன கிளாசில் தான் தேநீர் வழங்கப்படவேண்டுமன்றோ இன்ன கோப்பையில் தான் உணவு பரிமாறலாமென்றோ எந்த ஒரு நியதியும் கிடையாது. ஆனால் அவர்களோடு தப்பித் தவறி ஒரு வேலைக்காரி வந்துவிட்டால் வள்ளியின் கிளாசில் தான் மரியாதைக்குப் பயந்து தேநீர் வழங்க உத்தரவாகின்றதே.

ஆனால் எஜமானி சொல்கிறாள் 'உன்ரை வீட்டில அரையும் குறையுமாக சாப்பிடக்கூட வழியில்லாமல் கிடந்து சாக இருந்த நீ உன்ரை நல்ல காலத்திற்குத் தான் இங்கே வந்திருக்கிறாய். இப்படியான சொகுசான அறைகூட உனக்குப் படுக்க கிடைத்திருக்காது.

(i) வேலைக்கு அமர்ந்த வீட்டில் வள்ளிக்கு விதிக்கப்பட்ட புதிய விதிகள் எவை? அவை அவளது உணர்வை எவ்வாறு பாதித்தது?

(ii) வீட்டு உரிமையாளரின் நடத்தை பற்றி நீர் அறிந்து கொள்வது என்ன?

(iii) ஆசிரியரின் மொழிநடைச் சிறப்பினை எடுத்துக் காட்டுக. *(16 புள்ளிகள்)*

## பகுதி - II

*03)* வினைத் தூய்மை என்ற அதிகாரத்தில்

(அ) வினைத் தூய்மை என்றால் என்ன? என்பதை விளக்கி அதன் சிறப்பினை எடுத்துக் காட்டுக.

(ஆ) பழியும் பாவமுந் தரும் செயல்களை செய்யற்க என வள்ளுவர் கூறுமாற்றினை விளக்கிக் காட்டுக.

(இ) வினைத் தூய்மைக்கான காரணம் பற்றி வள்ளுவர் கூறுவனவற்றை எடுத்துக் காட்டுக.

(ஈ) வினைத் தூய்மை என்ற அதிகாரம் இக்கால அமைச்சர் ஒருவருக்கு அதன் அவசியம் பற்றி கருத்துரை வழங்குக. *(20 புள்ளிக்ள)*

04) பெரியாழ்வார் திருமொழி நீராடல் பகுதியில்

(அ) கண்ணனது குறும்புகளையும் அவனது செயற்பாடுகளையும் எடுத்துக் காட்டுக.

(ஆ) பெரியாழ்வாரின் தாய்மை உணர்வு வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக.

(இ) நீராட மறுக்கும் கண்ணனை நீராட அழைப்பதற்கு யசோதை கையாளும் தந்திரங்களை எடுத்துக் காட்டுக.

(ஈ) தமிழ் இலக்கிய வரலாற்றில் பெரியாழ்வாரின் முக்கியத்துவம் பற்றி கருத்துரை வழங்குக.

*(20 புள்ளிகள்)*

05) தசரதன் கைகேயியின் காலில் விழுந்து இரங்குதல் முதல் கைகேயிக்கு வரத்தை கொடுத்தது வரையுள்ள பகுதியில்

(அ) வரங்களைப் பெறவேண்டும் என்பதில் கைகேயியின் மனஉறுதி

(ஆ) இராமன் மீது தசரதன் கொண்ட பாசம்

(இ) தசரதன் கைகேயியை பழித்துக் கூறல்

போன்ற விடயங்களையும்

(ஈ) உவமையணியினைக் கையாள்வதில் கம்பனிடத்து காணப்படும் ஆற்றலினையும் தெளிவுபடுத்துக.

*(20 புள்ளிகள்)*

06) டாக்டர் மு. வரதராஜனின் மனவலிமை வேண்டும் என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) உலகத்தை திருத்துவது எளிதல்ல என்பதற்கு ஆசிரியர் கூறும் காரணங்களை எடுத்துக் காட்டுக.

(ஆ) இக்கட்டுரையில் ஆசிரியர் கையாளும் இலக்கிய ஆதாரங்களைக் குறிப்பிடுக.

(இ) மனவலிமை எதற்கு வேண்டப்படுவது, எதற்கு வேண்டப்படாதது என்பது தொடர்பாக ஆசிரியர் கூறுமாற்றினை புலப்படுத்துக.

(ஈ) ஆசிரியர் கட்டுரையில் கையாண்ட மொழிநடைச் சிறப்புப் பற்றித் துலக்குக.

*(20 புள்ளிகள்)*

07) ‘தாய்’ என்ற சிறுகதையை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

(அ) ‘பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு’ என்ற பழமொழியின் தத்துவம் இக்கதையில் வெளிப்படுமாற்றினை எடுத்துக் காட்டுக

(ஆ) இக்கதையில் இடம்பெறும் கிராமியப் பேச்சு வழக்கின் பயன்பாட்டினை எடுத்துக் காட்டுக.

(இ) சைக்கிளில் படிந்த சேறுக்கும் கதைப் பொருளுக்கும் இடையே உள்ள தொடர்பினை எடுத்துக் காட்டுக.

(ஈ) ஈழத்து சிறுகதை வளர்ச்சியில் வ. அ. இராசரத்தினத்தின் பங்களிப்பினை எடுத்துக் காட்டுக.

*(20 புள்ளிகள்)*

08) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சுருக்கமான விடை தருக.

(அ) கோவலனின் கொலைச் செய்தி அறிந்த கண்ணகியின் துயரம்.

(ஆ) தேம்பாவணியில் குழந்தை யேசுவின் பெருமைகள்.

(இ) நீண்ட பயணம் நாவலில் வரும் யாழ்ப்பாண மக்களின் வாழ்வியல் அம்சங்கள்.

(ஈ) கம்பதாசனின் தொழில் பற்றிய கவிதையில் இயற்கையின் தொழில் புரியும் விந்தை.

*(20 புள்ளிகள்)*